"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

5. அரசினர் தீர்மானம்

உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துக்கொண்டிருக்கும்போது, அவரது பேச்சைத் தடுக்க திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் தன்னுடைய இருக்கையிலிருந்து ஓடிவந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிரில் அவரது பேச்சினைத் தடுக்க முனைந்ததாலும், திரு. கோ. அரி அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசவேண்டும், முதலமைச்சர் பேசக் கூடாது என்று கூச்சலிட்டு, பேரவையின் அலுவல்களுக்கு இடையூறு செய்து, பேரவை விதிகளுக்கு மாறாக நடந்ததாலும், சட்டமன்றப் பேரவை

[பேராசிரியர் க. அன்பழகன்] [2008 ஏப்ரல் 15

விதி 121 (2)-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருந்த திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகிய இருவரையும் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதவாறு பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்தும், அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி, அவைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. கோ. அரி, திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரையில் எஞ்சிய நாட்களுக்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஊ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 11-4-2008 அன்று பேசிய உரையில், ** என்று கூறப்பட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.